

# அமரர். தங்கவேலு வேலுப்பிள்ளை
## அவர்களின்
# முப்பத்தோராம் நாள் நினைவுமலர்
## 25-08-2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அமரர். தங்கவேலு வேலுப்பிள்ளை

அவர்களின்

## முப்பத்தோராம் நாள்

# நினைவு மலர்

## 25-08-2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெறுதற்கரிய பிறவியாம்

மனிதப்பிறவியெடுத்து

இம்மண்ணுலகில் பிறந்து

அன்பின் திருவுருவாய்

அறிவின் ஒளிவிளக்காய்

சேவையின் சிகரமாய்

பாசத்தின் உறைவிடமாய்த்திகழ்ந்து

இறைவனது பொற்பாத கமலங்களை அடைந்த

**அமரர் தங்கவேலு வேலுப்பிள்ளை**

அவர்களின் 31ஆம் நாளினை நினைவு கூர்ந்து

எம் அன்புத்தெய்வத்தின் தூய நல் ஆத்மா

இறைவன் திருவடி நிழலில் நித்தியமாய்

அமைதி பெற அவர்தம் பொற்பாதங்களுக்கு

இம்மலரை காணிக்கையாக

சமர்ப்பணம் செய்கின்றோம்.

**இவ்வண்ணம்**
**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
30 - 03 - 1967

உதிர்வு
26 - 07 - 2023

# அமரர். தங்கவேலு வேலுப்பிள்ளை

**திதி வெண்பா**

" சோபகிருது ஆடி பத்தில் சித்த யோகமும்
பூர்வபக்க நவமி சுவாதியில் – நேர்த்தியாய்
தங்கவேலு வேலுப்பிள்ளை தாரணிவிட்டகன்று
தங்கினார் பரமசிவன் தாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைற்றடி போற்றுகின்றேனே

## பஞ்சபுராணங்கள்

### *- தேவாரம் -*

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

### *- திருவாசகம்-*

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - திருவிசைப்பா -

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## - திருப்பல்லாண்டு -

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லை சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## - திருப்புராணம் -

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின் கீழ் இருக்க வென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *- திருப்புகழ் -*

அகரமுமாகி யதி பனுமாகி யதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர் மேலாய்
இகரமுமாகி யெவைகளுமாகி யினிமையுமாகி வருவோனே
இருநில மீதி (ல்) எளியனும் வாழ எனது முனோடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களிகூரும் வடிவோனே
வனமுறை வேடனருளிய பூசை மகிழ்கதிர்காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசைமேவும் பெருமானே.

## *- வாழ்த்து -*

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தங்கவேலு வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்திலே போகாபிட்டடிய வலகொல்ல என்னும் நற்பதியிலே பண்பினில் சிறந்தோங்கிய தங்கவேலு தெய்வானை தம்பதியினருக்கு 1967.03.30ம் திகதி முதல் பிள்ளையாகப் பிறந்தவர்தான் தங்கவேலு வேலுப்பிள்ளை அவர்கள். இவரது உடன்பிறப்புக்களாக வீரசிங்கம், சந்திரசிங்கம், விஸ்வநாதன், இராமச்சந்திரன் ஆகிய நான்கு சகோதரர்களும், சிவஞானஜோதி என்னும் ஒரு சகோதரியுமாக மொத்தம் ஐந்து பேர் உள்ளனர். வேலுப்பிள்ளை அவர்கள் மூத்த சகோதரருக்குரிய அனைத்து கடமைகளையும் தமது உடன்பிறப்புக்களுக்கு ஒழுங்குபட கவனித்து வந்தவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இவர் தனது இளமைக்காலக் கல்வியை 1973-1983 வரை க/வ/ குண்டகசாலைவிவேகானந்தா தமிழ் மாகவித்தியாலயத்தில் தொடர்ந்து பத்தாம்வகுப்பு வரைக் கற்று உயர்தரக் கல்வியை 1984 -1986 மடவள மதினா மத்திய கல்லுரியில் கற்று, 1987ல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி 1991ல் பட்டதாரியாக வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து 1996 - 2014ம் வரை க/வ/ றஜவல இந்து தேசிய கல்லூாரியில் ஆசிரியராகப் பணியை மேற்கொண்டார். அக்காலப்பகுதியில் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் பாடங்களை திறம்படக் கற்பித்தார்.

2014ம் வருடம் அங்கிருந்து இடமாற்றம் பெற்று கமு/கமு/ கார்மேல் பற்றிமாக் கல்லூாரியில் தொடர்ச்சியாக பத்து வருடங்கள் கற்பித்துவரும் வேளையில் நோய்வாய்ப்பட்டு 2023.07.26ம் திகதி இறைபதம் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் துரைவந்தியமேட்டைப் பிறப்பிடமாகவும் பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட குடும்பநல உத்தியோத்தரான தம்பிப்பிள்ளை கமலா தேவியை கரம்பிடித்து விதுன்,கிசோர்க்கவின், அபிலாஸ், கவிஸ்னா ஆகியோருக்கு தந்தையுமானார்.

ஆன்மீக நெறியில் தம்மை ஈடுபடுத்தி ஒருபக்திமானாக எமது பகுதியில் திகழ்ந்தவர் என்பதை நாம் நேரடியாகக் கண்டிருக்கின்றோம். ஆலயங்களுக்குச்சென்று பஜனைகளில் பங்குகொள்வது மட்டுமின்றி ஆலயக் கட்டடங்களுக்கும் தம்மாலான உதவிகளையும் செய்திருக்கின்றார். கதிர்காமக் கந்தன் ஆலய உற்சவங்கள் ஆரம்பித்துவிட்டால் அவர் முழுமையாக முருகபக்தனாகவே மாறிவிடுவார். ஆசார சீலராக உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரையாக கதிர்காமக்கந்தனை தரிசிப்பதிலே அதிக ஆர்வம் உள்ளவராக இருந்து முருகன் அருள் பெற்றவராக விளங்கினார். அதுமட்டுமின்றி நவராத்திரி காலங்கள் ஆரப்பித்து விட்டால் தம்மை அன்னை பராசக்தியிடமே அர்பணித்து விடுவார். தாம் கற்பிக்கின்ற பாடசாலைகளிலும், தமதுஇல்லத்திலும் முத் தேவியர்களையும் பூசித்து வழிபாடுகளை மேற்கொள்ளும் பக்திமானே இவராவார்.

இத்தகைய ஒரு பெருமகனைத்தான் நாம் இன்று இழந்து நிற்கின்றோம். **"வினைப்பயன் முடிந்தால் தினைப்பொழுதும் தங்கமுடியாது"** என்னும் இந்துமத தத்துவத்திற்கு அமைவாக தமது ஐம்பத்தாறாவது வயதிலே 2023.07.26 ஆம் நாள் தமது உயிரை விடுத்து அவ்வுலகம் சென்றார். அன்னாரது ஆன்மா இறைவனோடு இரண்டறக்கலந்து சுவர்க்கபதியிலே சுகந்தங்கள் பெற்று விளங்க எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் சிந்திய உணர்ச்சித் துளிகள். . . . .

### இதயத்துள் என்றும் வாழ்வீர்!

ஆண்டவன் பாதமலர் பற்றினீரோ!
அன்புக் குடும்பம் அமைந்த நாள்முதலாய்
ஆனந்த வாழ்வில் ஆண்டுகள் பல கடந்து
நான்கு பிள்ளைகளை நலமோடு பெற்றிருந்து
நல்லறம் கண்டு நல்லோர்கள் தினம்வாழ்த்த
குறையேதுமின்றி நிறைந்த மனதோடு
குவலயம் மீதில் சீரோடு வாழ்கையிலே
எங்களைவிட்டு நீங்கள் பிரிந்து சென்றதனால்
இதயம் சுக்கு நூறாய் உடைந்து போனேனே!
துன்பங்கள்,துயரங்கள் ஏது வந்தாலும்
சோர்ந்து போகாமல் துடிப்பாய் இருந்தீரே!
இவ்வாறு எங்களது வாழ்க்கை செல்கையிலே
எங்கிருந்துதான் இந்தக் கொடுமை சேர்ந்ததுவோ!
நோய்வாய்ப்பட்டு இருந்த நாட்களெல்லாம்
நொந்து, துவண்டு, ஒடிந்து போனோம் நாம்.
பல்லாண்டுகள் இன்னும் வாழ வேண்டுமென்று
எல்லாம் வல்ல இறைவனைத் துதித்தோமே!
எல்லாம் முடிந்ததென்றா எம்மைவிட்டு உம்மை
ஆண்டவன் அழைத்தான் ஆவிதுடித்துவிட்டோம்!
இந்த உலகினிலே வாழும்வரை உங்களுடன்
வந்திணைந்த நினைவுகளோடு வாழ்ந்து
அவ்வுலகம் வந்து சந்திப்பேன் உம்மை.
உங்கள் ஆன்மா சாந்தி பெற்று இறையோடு
எப்பொழுதும் கலந்து இன்பம் பெற்றுவிட
அன்றாடம் நான் வணங்கும்
ஆண்டவனைத் துதிக்கின்றேன்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**ஆன்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கும்**
**அன்பு மனைவி**
**திருமதி . கமலாதேவி வேலுப்பிள்ளை**
**பெரியநீலாவணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் இதயங்களில் எப்போதும் வாழ்வீர்கள் அப்பா!

அன்புள்ள அப்பாவே! ஆசை அப்பாவே!
பண்புள்ள அப்பாவே! பாசமுள்ள அப்பாவே!
எங்கள் உயிரின் உயிரே அப்பாவே!
எங்களை விட்டு ஏன் பிரிந்தீர் அப்பாவே!
உயிர் வாழ்ந்தீரே எங்களுக்காக
உயிர் துறந்தீரே எதற்காக
உண்மையிலே அந்தக் காலனுக்கு
கண்ணில்லையா? கருணை இல்லையா?
மண்ணுலகை விட்டு விண்ணுலகத்துக்கு
இழுத்துச்சென்றானே இரக்கமில்லாதவன்.
இப்பொழுது எங்களுக்கு யார் இருக்கிறார்
முப்பொழுதும் எங்களை முறையாகப்பார்த்தீரே!
தப்புக்கள் நாங்கள் செய்தாலும் தண்டிக்கமாட்டீர்களே
குழப்படிகள் நாங்கள் செய்தாலும்
கொஞ்சம்கூடக் கோபப்படாமல்
செல்லமாக எங்களைத் தட்டிக்கொடுத்து
சிரித்து மகிழ்வீர்களே அப்பாவே!
அந்தச்சிரிப்பை இனி எங்கு காண்போம் நாம்
சீக்கிரமாகப் பறந்துசென்றதால்
சிந்தையெல்லாம் நொந்து அழுகின்றோமே அப்பாவே!
உயிர் பிரியும் வலியை உங்கள் பிரிவால்
உணர்கின்றோம் அப்பாவே!
நீங்கள் தந்த வாழ்க்கைக்கு
கோடான கோடி நன்றிகள் அப்பா
எங்கள் உயிர் இருக்கும்வரை
உங்களை நாங்கள் மறக்க மாட்டோம்!
சதாகாலமும் உங்கள் நினைவோடு வாழ்ந்து
அடுத்த பிறவியிலும் உங்கள் பிள்ளைகளாய்ப்
பிறந்து பல்லாண்டு காலங்கள் உங்களோடு வாழ
எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகிறோம்!
உங்கள் ஆன்மா சாந்தி பெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி ! ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !

**பாசமிகு உங்கள் பிள்ளைச் செல்வங்கள். வே. விதுன்**
**வே. கிசோர்கவின்**
**வே. அபிலாஷ்**
**வே. கவிஷ்னா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்க்கபதிக்குப் புறப்பட்டாயா மகனே!

அன்பு மகனே! என் ஆசை மகனே! நான் நெர்ந்து தவமிருந்து பெற்றெடுத்த என் தலை மகனே! என்னுடைய துரையே! நீ எங்கையா போய்விட்டாய். இன்றோடு உன்னை நான் பறிகோடுத்து முப்பத்தொரு நாட்கள் கடந்தாலும் அன்றாடம் பரிதவித்து தினந்தோறும் கண்ணீர் விட்டுக்கொண்டுதானேடா இருக்கிறேன் தங்கம். நான் உன்னை எப்பொழுதும் துரை என்றுதானே கூப்பிடுவேன். வேலன் அருள்புரிவான் நீ பல்லாண்டு காலங்கள் இந்த மண்ணிலே வாழ வேண்டும் என்றுதானே மகனே நானும் உனது அப்பாவும் வேலுப்பிள்ளை என்று பெயர் வைத்தோம். அந்தவேலனும் உன்னைக் கைவிட்டு விட்டானே துரையே!

தாய்க்குத் தலைமகனாக இருந்து எனது இறுதிக்காலம் வரைக்கும் என்னைப் பராமரித்து எனக்குரிய கடமைகளை எல்லாம் நீ புரிவாய். உன் தம்பிமார் தங்கையோடு சேர்ந்து எல்லாரும் ஒற்றுமையாக இருந்து நான் வாழும் வரைக்கும் என்னோடு இருக்காமல் இடைநடுவில் அந்த கருணை இல்லாத காலன் உன்னை இழுத்துக்கொண்டு போய்விட்டானே என்று நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சு வெடிச்சிப்போகுதடா துரையே! உன்னைப்பற்றி நான் நினைத்த நினைவுகள் கண்ட கனவுகள் எல்லாம் கானல் நீர்போல் ஆகிவிட்டதே! நான் என் செய்வேன் மகனே ஆண்டவன் என்னிடம் இருந்து உன்னைப் பிரித்துவிட்டானே. நமது மலையகத்தில் பளகொல்ல என்ற இடத்தில் பிறந்து வளர்ந்த உனக்கு அம்பாரை மாவட்டதில் துரைவந்தியமேட்டில் பிறந்து வளர்ந்து பெரியநீலாவணையில் குடிபுகுந்த நற்குணமுள்ள ஒரு பெண்ணை எல்லோரும் பார்த்துப் பேசி கலியாணம் முடித்து வைத்து சந்தோசப்பட்டோமே! நீ எனக்கு நான்கு பேரப்பிள்ளைகளையும் தந்தாயே துரையே. நான் மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்கி இத்தனை காலமும் வாழ்ந்து வந்தேனே. இந்த நிலையில் தானடா உனக்கு அந்த கொடிய நோய் வரத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்று தொடக்கம் நானும் உன்னோடுதானே இருந்து வாறன். அம்பாரைக்கும் கண்டிக்குமாக எத்தனை தடவைகள் உன்னை நாங்கள் கொண்டுபோய் வந்து உன்நோயைக் குணமாக்க முயற்சிகள் செய்துகொண்டிருந்தோம். கடைசியாக எதுவும் சரிவராம வைத்த நேர்த்திகளும் கைகூடாம மேலோகம் சென்று விட்டாயே!

உகந்தை தேவாலயம் இருந்து கதிர்காமத்திற்கு காட்டு வழியாக பாத யாத்திரை செய்யும் போது நீ பக்தியோடு பாடிய பாட்டுக்கள் எல்லாம் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டுதானே இருக்குது.

படிக்கிற காலங்களில் நீ எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாய். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி பட்டம் பெற்று வந்த அன்று நான் சந்தோசத்தில் பூரித்து மகிழ்ந்தேனே. இப்பொது நான் அந்தச் சந்தோசத்தை இழந்து தவிக்கிறேனே.

மறந்தாத்தானே உன்னை நினைப்பதற்கு நெஞ்சமேல்லாம் உன் நினைவுகள்தான் நிறைந்திருக்கு. என் தங்கமகனே துரையே எங்களையெல்லாம் விட்டுப்பிரிந்திட்ட உன் ஆத்மா இறைவன் பாதங்களில் இணைந்திருக்க எல்லாம் வல்ல ஆண்டவனை வணங்குகிறேன்.

**உன் பாசமுள்ள தாயார்,**
**திருமதி தெய்வானை தங்கவேலு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனுக்கு தங்கையின் சமர்ப்பணம்.

அண்ணா! அண்ணா! அண்ணா! என
ஆசையாய் அழைத்திட்ட போதும்
அருகினில் இல்லாமல் எங்கேசென்றாயோ?
அன்பையும், அறிவையும் எடுத்துச் சென்றாயோ?

என்தாய்க்குத் தலைமகனாய்ப் பிறந்து
என்தந்தைக்குப் பெயர் கூறும் பிள்ளையாய் வளர்ந்து
எமக்கு நற்சகோதரனாய் இருந்து
எம்மைவிட்டு ஏன் சென்றாய் இப்போ நீ பிரிந்து

கவிதை எழுதிடப் பழக்கினாய் நீ அன்று
கல்வியைக் கற்றிடவும் செய்தாய் அருகில் நின்று
கண்களில் நீருடன் எழுதுகிறேன் கவிதையொன்று
காணக் கிடைக்காதா! அண்ணனை இனி என்று.

கற்பதை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டு
கல்வியில் சிகரத்தைத் தொட்டிட என்று
காலையும் மாலையும் கருத்துடன் நின்று
கற்றாயே நல்லாசான் பதவியும் பெற்று.

நல்லதோர் துணையை நீ பெற்றபோது
நன்றி கூறினேன் இறைவனுக்கு அப்போது
நலமாய் வாழ்ந்தாய் நீ இல்லறத்தின்போது
நல்நேசம் கொண்டாய் குடும்பத்தின் மீது

வந்ததொரு வருத்தமென அறிந்தேனே!
வைத்தியத்தில் சரியாகுமென நினைத்தேனே
வைத்தியம் கைகொடுக்க வில்லையே அண்ணா ஆனால்,
வணங்கினேன் கடவுளும் இல்லையோ அண்ணா.

**பாசமுடன் அன்புத் தங்கை,**
**திருமதி.சி. சுப்ரமணியம் (ஜோதி)**
**திகன (கண்டி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்க்கு தலைமகனே தன்னிகரில்லா சகோதரனே!

ஆறு உடன் பிறப்புக்களின் மூத்த சகோதரனாய்
அருமைக் குணங்களில் ஒன்றித்த உறைவிடமாய்
தங்கவேல் தெய்வானை தம்பதியினருக்கு
அருமந்த புத்திரனாய் அவதரித்தாயே!

பணிவு உன்னிடம் பணிந்து நின்றது
படிப்பு உன்னிடம் மகுடம் கேட்டது
கனிவு உன்னிடம் நிறைந்து கிடந்தது
கள்ளமற்ற இதயம் திறந்தே இருந்தது

எண்ணில்லா இதயங்களை கொள்ளைகொண்டாய்
எல்லோரது நட்பிலும் உணர்வாய் மிளிர்ந்தாய்
காலனும் உன்னிடம் நட்புக்கொள்ள
காலம் காலமாய் காத்து நின்றானோ?

இறைபக்தி கொண்டே இயல்பாக இருந்தாய்
எல்லா விரதமும் முறையா நோற்றாய்
கால்களால் நடந்து யாத்திரை செய்தாய்
காலம் முடிந்ததோ சடுதியில் சென்றாய்

தாயின் ஓலம் மனைவியின் சோகம்
குழந்தைகளின் கதறல் குடும்பத்தின் புலம்பல்
நட்புகளின் தவிப்பு உறவுகளின் தேடல்
நீயில்லா வெறுமை நீள்கிறது அழுகை

மரணம் கூட உன்பிரிவால் மனம் நொந்து போனது
காலனுக்கும் உன் இழப்பால் கண்ணீர் சுமை ஆனது
மீண்டெழாய் என அறிந்தும் மீளாத் துன்பம் தொடர்கிறது
மீண்டும் பிறவா நிலையுடனே
நீண்ட சாந்தி பெறுவாய் அண்ணா!

**T.செல்வராஜ் (உடன் பிறவா சகோதரன்)**
**குண்டகசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் மறைந்தாய்..................

அன்பின் உறைவிடமாய் அகிலமே உனைப்போற்ற
அத்தான் அத்தான் என்று அயராமல் நாம் அழைக்க
அனைவருமே உங்களை அப்பாவியாகப் பார்த்திட
அறவே உங்களுக்கு கோபமே வருவதில்லை.

ஆசை ஆசையாய் அரவணைக்க ஓடிவந்தோம்
ஆண்டவன்தான் உன்னை அவனடியில் கொண்டு சேர்த்தான்
ஆறாத்துயரினிலே அனைவருமே உடனிருக்க
ஆறுதல்தான் எமக்கு யார்வந்து கூறுவது?

இறைவன்தான் துணை என்று அனுதினமும் இருந்தீரே!
இப்போது நாங்கள் உம்மை எங்குதான் காண்பதுவோ
இன்புறும் முகத்துடன் எப்போதும் இருப்பீரே!
இரவுதான் என்றாலும் எமை அழைத்துக் கதைப்பீரே!

உமைத்தேடி வருவோரை உபசரித்து வைப்பீரே!
உத்தமர்தான் என்றுசொல்லி உலகமே உமைப்
போற்றியதே
உற்றார் உறவினர்களுடன் உவப்பாக பழகினீரே
உனக் கென்ன நடந்ததென்று உதவநாங்கள் ஓடிவந்தோம்.

ஊர்மக்கள் உனைப்பார்க்க ஓடோடி வந்தனரே
ஊழியம் நீர் செய்ய இறைவன் உமை அழைத்தானோ?
ஊறு இல்லா வாழ்க்கையை வாழ்ந்துதான் காட்டினீரே
ஊண்மறந்து உமைநினைத்து அழுகின்றோம் அனுதினமும்.

எதற்கு இந்த வாழ்க்கை என்று எம்மிடமே கேட்பீரே
எவர்வந்த போதும் இதமாகக் கதைப்பீரே
எமைமறந்து நீர் ஏன் சீக்கிரம் சென்றுவிட்டீர்
எவருக்கும் இந்த நிலை இனிவரக் வரக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்இந்தக் கொடிய நோய் இவ்வுலகில் உங்களுக்கு?
ஏமாற்று வித்தைக்காரன் இறைவன்தான் என்று எண்ணி
ஏசுகின்றோம், புலம்புகின்றோம் இனியாரை நோகுவது
ஏகனவன் உன்னை ஏன் எடுத்தான் சீக்கிரமே.

ஐயங்கள் இல்லாமல் அனுதினமும் கற்பித்தீரே
ஐங்கரன் என்று எனை அனுதினமும் அழைப்பீரே
ஐந்து சகோதரரும் அண்ணா என்றலற
ஐயா அன்று நீங்கள் விண்ணுலகம் பறந்ததேனோ?

ஒன்றுமே இல்லாத ஒப்பனைதான் வாழ்க்கை என்று
ஒருவரையும் நீர் ஒருநாளும் பகைத்ததில்லை
ஒருவருக்கும் நீர் தீங்கேதும் நினைத்ததில்லை
ஒன்றுதான் உண்மை என்று நீர் உரைத்துச் சென்றீரே!

ஓவென்று நாம்அலற ஊரேதிரண்டுவர
ஓடோடி நாம் வந்தோம் உங்களைக் காண்பதற்கு
ஓயாமல் எங்கள் உள்ளமது கனக்கிறது
ஓரமாய் நீர்நின்று உள்ளத்தால் பார்க்கிறீரே!

ஔவையார் கூறிய அறிவுரையில் வாழ்ந்தீரே
ஔவியம் பேசேல் எனும் தத்துவத்தை ஏற்றீரே
ஔடதம் பல கொடுத்தும் நோய்தீர முடியாமல்
ஔடதமும் பொய்யாகி அவ்வுலகம் சென்றீரே!

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்,**
**அன்பு மச்சான் மார், மச்சாள்மார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பணியில் பணியாளராய்


பற்றிமாவில்
பற்றிக்கொண்ட காலம் - எனக்கு
சிறிதாக இருந்தாலும்
சிறப்பான ஆசிரியர்களை நயமாக நானறிவேன்.

அதிலொருவர்
அமைதியானவர்-
அருமையானவர்-
பக்தியானவர்-
பௌதிகவியல் ஆசிரியர்.

வேலனவன் போல வந்து நிற்பார்
வேலுப்பிள்ளையவர்
வேர்கொண்டு வாழ்வீர் என்றிருக்க
வேரறுத்து நின்றதேனோ! வாழ்வு போதுமென்றோ!

பக்தியுடன் பார்க்கின்றேன்
பண்புடைய மனிதனாய்
வாழ்வாங்கு வாழ்ந்தவர் - நீர்
வானுறையும் தெய்வத்துள் இருக்க பிரார்த்திக்கின்றேன்.

அருட். சகோ. எஸ். இ. றெஜினோல்ட்
அதிபர்
கமு/கமு/கார்மேல் பற்றிமா
தேசிய பாடசாலை
கல்முனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிசேர் ஆசிரியராய்...


தவிர்க்க முடியாத அழைப்பு!
திரும்பமுடியாத பயணம்
இருந்தும் மனம் ஏற்க மறுக்கிறது
இன்று மாதம் ஒன்று கடக்கிறது

கற்ற கல்விதனைக் கொண்டு
கற்றுக் கொடுத்தீர் நீர்
கனிவான கணிதமதில்
பௌதிகவியல் பாடமதை

கற்றவரும் - உம் கல்வி
பெற்றவரும் கற்ற பயனாய்
உயர்ந்து செல்ல
உரமானீர் - யார் மறுப்பார்?

எங்கள் மனதில்
என்றும் மலர்வீர்
நீங்கா நினைவுகளால்
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**பிரதி அதிபர்,**
**திரு சு. கருணாகரன்**
**கமு/கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கம் வேலுப்பிள்ளை...

அன்பானவர், பண்பானவர், பாசமானவர் நினைத்தாலே மனம் தாங்கவில்லை!

அன்பு சகோதரர், நண்பர் இருவரும் ஒரே பாடம் கற்பிக்கின்றவர்கள் என்பதால் என்னுடன் மிகவும் நெருக்கமானவர். எமது பாடசாலையில் பத்து ஆண்டுகள் கற்பித்தாலும் பதினெட்டு வருடங்களுக்கு மேலாக உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் இணைந்திருந்தோம்.

வகுப்பறை கற்பித்தல், ஒழுக்க செயற்பாடுகள் என்பவற்றில் மிகவும் சிறப்பாக செயற்பட்டார்.

உயர்தர மாணவர்களை சுற்றுலா கூட்டிச்செல்வது, பரிசோதனை செய்முறைக்கு கூட்டிச்செல்வது என்றால் வேலுப்பிள்ளை சேர்தான் முன்னின்று அதனை சிறப்பாக செய்துமுடிப்பார். சுற்றுலா செல்லும்போது கண்டியில் அவர் முன்னர் கற்பித்த பாடசாலையை மாணவர்கள் தங்குவதற்கு ஒழுங்குபடுத்துவார். அந்த பாடசாலையில் இப்போதும் எமது மாணவர்கள் சுற்றுலா சென்றால் தங்கிவருவார்கள்.

பாடசாலையில் நவராத்திரி பூஜை என்றால் வேலுப்பிள்ளை சேர் பொறுப்பாக இருந்து திறம்பட நடத்திவைப்பார். கொரோனா காலத்தில் பாடசாலை நடைபெறாத காலத்தில் தனது வீட்டில் பொங்கல் செய்து கொண்டுவந்து சில ஆசிரியர்களை அழைத்து பூஜை நடத்துவார். இவ்வாறு இறைவனுக்கு சேவைசெய்தும் இறைவன் ஏன் தன்னிடம் அழைத்தானோ தெரியவில்லை.

கண்டியில் அவரது தாய் சகோதரர்கள் வீட்டிற்குச் சென்றால் அன்பாக அரவணைக்கும் தன்மை அவரின் சிறந்த மனநிலையை காட்டுகின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிடம் மிகவும் அன்பாக பழகும் மனிதருள் மாணிக்கம் வேலுப்பிளை சேர் இறைவனடி சேர்ந்தாலும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், உறவுகளும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையை இறைவன் கொடுக்க வேண்டும். இப்புவியில் ஆசிரியர் பணியாற்றி ஓடோடி தினம் அயராது உழைத்து அன்பு எனும் நெய்யூற்றி அறிவு எனும் ஒளியுடனே குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம்சாந்தி ! ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !

**கி.சசிகரபவன்**
**பகுதி தலைவர்**
**உயர்தர கணித விஞ்ஞான பிரிவு**
**கமு/கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே
உங்கள் இன்முகம்
எந்நாளும் உயிர்வாழும்

பிறப்பு இயற்கை நியதி என்றால்
இறப்பு என்ன விதிவிலக்கா?
இருந்தும் இத்தனை விரைவில்
இடம்மாறியதுதான் ஏனோ?

உடல் மண்ணில் மறைந்தாலும்
உயிருள்ள நிழல் நினைவுகளாய்
இறப்பதைக் கண்டோம் - உம்
இறுதிச்சடங்கில்!

பல பயணம்
பல பணிகள்
நாம் அறிவோம்
உம் பணியை
சக ஆசிரியராய்
சாதித்த காலமதை
நன்றியுடன் பார்க்கின்றேன்
நன்றியுடையவனாய்!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!



**திரு. சி. நந்தகுமார்,**
**கலைப்பிரிவு பகுதித்தலைவர்.**
**கமு/கமு/கார்மேல் பற்றிமாகல்லூரி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே நற்பேறு நீ அடைவாய்!

அன்பும் அமைதியும் உன்தோற்றம்
அடக்கமும் ஆற்றலும் உன் இயல்பு
சிந்தையில் தினமும் தெளிவிருக்கும்
சிரித்த உன் முகத்தில் ஒளி இருக்கும்.

நட்பிற்கு நல்லதோர் உதாரணமாய்
நடத்தையில் சிறந்ததோர் மனிதனாய்
வையகம் போற்ற வாழ்ந்து நீயும்
வானுலகம் சென்ற வகையும்தான் என்ன?

பல் திசையிலிருந்து வந்தோம்
பல்கலைக் கழகத்தில் ஒன்றிணைந்தோம்
பசுமை நிறைந்த காலமதில்
பல உறவை நாமும் சேமித்தோம்
படித்த பலன் அதனை அனுபவித்தோம்
பட்டமும் நாமும் பெற்றுவிட்டோம்!

வசந்தம் தந்த காலம்விட்டு
வாழ்க்கை தந்த கடமை ஏற்று
ஆங்காங்கு சென்றாலும்
சந்தர்ப்பம் கிடைக்கும் வேளை எல்லாம் - உன்
சாந்த குணமும் தயாள சிந்தையும் எம்
சிந்தையில் உன்னை நிறுத்திடுமே!

வேலு எம்மை பிரிந்தாயோ
வேறு உலகம் சென்றாயோ
வெற்றிடமான உன் இடத்தை
வேறு யாரும் நிரப்புவரோ
ஈடு செய்ய முடியாத உன் இழப்பை
ஏற்க எம் மனம் மறுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவென்றிருந்தால் பிரிவொன்றிருக்கும்
உலகறிந்த உண்மை அது ஆனாலும்,
உன் பிரிவு எம் உள்ளத்தை
உலுக்கி விட்டதே நண்பா!
ஆண்டவன் உன்னை அழைத்தானோ
அவன் அடியில் இடமும் கொடுத்தானோ?
வந்த வேலையை முடித்தாயோ?
வாழ்க்கை தன்னை விடுத்தாயோ?
வேளை உனக்கு வந்ததென்று
வீடு பேறு சென்றாயோ?

மண்ணில் வாழும் உயிரினங்கள்
மரணத்தை ஒருநாள் ஏற்றிடுமே
வாழும் நாளை வளமாக்கி
வாழ்க்கை தன்னைச் சிறப்பாக்கி
வரலாறாய் நீயும் மாறிவிட்டாய் - உன்
ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனிடம் மன்றாடுகின்றோம்.

**நண்பர்கள்,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புக்கு இலக்கணம் வகுத்தவர் நண்பர் வேலுப்பிள்ளை

ஒரு சாதாரண குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்து, வெகுதூரம் நடந்துசென்று பாடசாலைக் கல்வியை முடித்து ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறியவர் எமது நண்பர் வேலுப்பிள்ளை.
அவர் கல்வி கற்கும் காலத்திலேயே அனைவரிடமும் சகஜமாக, அளவாக பழகும் பண்புடையவர். தேவையற்ற எந்த விடயங்களிலும் தலையிடாதவர். இதுவே இவர் பலரது அபிமானத்துக்கும், மரியாதைக்கும் உரியவராக அமையக் காரணமாக அமைந்தது.

எமது நண்பர் வேலுப்பிள்ளை நட்புக்கு இலக்கணமாக திகழ்பவர். அவர் எப்பொழுதும் தம்மைப்பற்றி பெருமிதம் கொள்ளாதவர். பிறர் துன்புறும் நேரத்தில் ஆறுதல் கூறுபவர். யாரேனும் தவறு செய்தாலும் அதைப் பொருட்படுத்தாதவர்.

நண்பர்கள் யாருக்கும் சுகவீனம் ஏற்பட்டால் அவர்களை சென்று சந்திக்காமல் விடமாட்டார். தனது உடல் சுகவீனமுற்றிருந்த போதும் கூட அச்செயலை தொடர்ச்சியாக செய்து வந்தவர்.

இடைக்கிடையில் தமது நண்பர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாவது சுகத்தை விசாரித்துக் கொள்வார். பிறரது இன்பதுன்பங்களில் பங்குகொள்ளாமல் விடமாட்டார்.

அவ்வாறான அன்பும், பண்பும் கொண்ட ஒரு நண்பர் எம்மை விட்டு பிரிந்து சென்றது என்னை மீழாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. இறைவனின் நியதிப்படி அவர்தன் வாழ்நாளின் இறுதிக்காலத்தில் நோயால் பீடிக்கப்பட்டு தனது பாவங்களை நிவர்த்திசெய்து கொண்டார். இனி அவருக்கு நிச்சயம் விண்ணுலகச் சொர்க்கம் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனைகள்.

**அன்புடன் நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய நாயகனை தரணியில் இழந்தோம்!

சத்தியத்தின் மேடையிலே சாந்தமுடன் தினம் பாடி
தத்துவத்தின் சாரலிலே சகலரையும் உள்வாங்கி
இத்தரைமீதினிலே எப்பொழுதும் வாழ்ந்திருந்த
உத்தமனை இழந்தின்று உள்ளத்தால் அழுகின்றோம்.

அல்லும் பகலும் ஆண்டவன் சிந்தனையில்
சொல்லும் செயலும் தொடர்பாகி நற்கருமம்
பல்கிப் பெருகிடப் பாங்குடன் வாழ்ந்திருந்த
நல்லோன் எங்கள் நாயகன் வேலுப்பிள்ளை

"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது" என்பதுபோல்
உள்ளத்தில் எழுகின்ற உயர்வான எண்ணங்கள்
எள்ளளவும் மாறாமல் ஈடில்லாச் செயலாக்கும்
வள்ளல் குணம்கொண்ட வல்லோன் வேலுப்பிள்ளை

நெய்தலும் குறிஞ்சியம் நெருங்கி உறவாடி
பெய்திட்ட அன்புமழை பெருகிடப் பாரினிலே
எய்திட்டார் இனிதாக நான்கு பிள்ளைகளை.
தெய்வ அருள் இதுவென்று சீருடன் வாழ்ந்தாரே!

பற்றுடனே மாணாக்கர் பயின்றிடவே கார்மேல்
பற்றிமாக் கல்லூரியில் பத்தாண்டு காலங்கள்
சற்றும் தளராமல் சாதனை படைத்த உம்மை
புற்றுநோய் வந்திங்கே புன்மைகள் புரிந்ததேனோ?

தங்கவேலு தெய்வானை தம்பதியர் இப்பாரில்
பங்கமறப் பெற்றெடுத்த பாக்கியவான் எங்களது
தங்கத் திருமனார் தங்காது புவிவிடுத்து
எங்கே பறந்திட்டாய் ஏங்கித் தவிக்கின்றோர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் நொடியுற்று நொந்து சிலகாலம்
தேய்பிறைபோல தேகமும் மெலிவாகி
பாய்படுக்கைகிலே படுத்துச் சில நாட்கள்
போய்விட்டாயோ புண்ணிய லோகத்துக்கு.

வேலுப்பிள்ளை என்னும் வித்தகனே உமது ஆன்மா
சாலப் பொருந்துமிடம் சொர்க்கபதி என்பதனால்
ஞாலம் மீதினிலே நாங்களெல்லாம் ஒன்றாகி
ஆலம் உண்ட எங்கள் ஆண்டவனை வேண்டுகின்றோம்!

**பாவாணர் அக்கரைப்பாக்கியன்**
**(ஓய்வுநிலை அதிபர்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேருக்கு விழுதின் அர்ப்பணம்.....

நீலையூர் பூத்த முல்லை
சொந்தமே வேலுப்பிள்ளை
மாலையில் வாடியமலராய்
மாறினாய் ஏனோ சித்தப்பா.
வேலைநல் சேவை கொண்டே
விட்டெமைப் போனீ ரேனோ?
ஓய்வதைக் காணும் முன்பே
ஓய்வெடுத் தானீர் அப்பா!

கூட்டுறவாகிக் குடும்பம் - உம்
குணத்தாலே குவலயம் கண்டே
நாட்டுறவாகிப் பார்த்த
நற்பணி சேர்த்தீர் தானே!
ஏட்டுற வாக்கிப் பார்த்தீர்
இங்கெனைக் கல்விமானாய்
வாட்டுதே சேதி கேட்டு
வாழ்க்கையின் ஈற்று இதுவென்று?

பற்றிமா கல்விப்பாதை
பாங்குடன் போற்ற வேண்டி
பௌதீகம் கற்றுத் தந்து
பேர்புகழ் சேர்த்தாய் ஐயா!
கற்புலனாற்றல் கொண்டு
கனிவிலே பாசமோங்கி
அரசியலாசான் என்னை
நட்டுநீர் வளர்த்தீர் தானே !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் கொண்ட காலனுமை
நொடிப் பொழுதிலே பறிப்பானென்று - நாம்
கணப்பொழுதும் நினைத்ததில்லை
மண்ணில் வாழும் மக்களிடை
மாண்புறு மனித மாணிக்கமே !
நோயுற்றகாலத்தே காயுற்ற - உம்
கோலம் கண்டு கண்கலங்கி
கண்டிக்கு காரிலே கொண்டு சென்றேனே!

கனவுகள் நிறைந்த போதும்
கடைசியில் எதுதான் மிச்சம்
பிரியனாம் எனையழைத்து
பிள்ளைகள் கவனமென்றார்
சினமிலா வாழ்வைத் தொட்டு
சிறப்புடன் இருந்து விட்டு
தினங்களைக் கடந்து கொண்டே
திடமுடன் நடந்திட்டீரே !

**பெறாமகன்**
**அ.வேந்தன்**
**ஆசிரியர் கமு/கமு/கணேஷ மகா வித்தியாலயம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ஆண்டுகள் வாழ்வில்லை

ஆயிரம் ஆண்டுகள் வாழவில்லை
ஐம்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்தாலும்
வாழ்தலின் அர்த்தத்ததைப் பரிசளித்த
எனதன்பு தந்தைக்கு இவ்வரிகள் சமர்ப்பணம்.

தந்தையன்பினை முழுமையாக அனுபவிக்காத எமக்கு
தந்தை அன்பின் சுவாரஸ்யத்தினை காட்டிச் சென்ற
எங்கள் சித்தாப்பாவிற்கு இவ்வரிகள் சமர்ப்பணம்.

அன்பான பேச்சும் பண்பான குணமும் கொண்டு
பாசமுடன் எம்மை அரவணைத்த உத்தமரே
பாங்கனுக்கு பாங்கனாய்
தேசிகனுக்குத் தேசிகனாய்
உறவுகளுக்கு வலிமை சேர்த்தீரே!

இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து
எமக்கு இலக்கணமாய் நின்றவரே!
அந் நல்லறத்தில் பதினாறு ஆண்டுகள் கழித்து
இன்புற்று வாழ்ந்த காலம் அவ் இறைவனுக்கும்
இனி போதும் என்றாகிறதோ?

எதையும் இல்லை யென்னாதஈகைப் பெருந்தகையே
காலனவன் உயிரைக் கேட்டபோதும்
"எடுத்துக் கொள்" என்றீரோ?

உயிரினும் மேலான உறவின் உயிர் பிரிதலால்
உழலும் உறவுகளுக்கு
அனுதாபத் துளிகளை உதிர்த்து – உம்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**உமது பெறாமகள்**
**வி. பானுமதி (ஆசிரியை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரக்கன் றிநின்பதந்
தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்வர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ!
உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்லியுங் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவ முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீங்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுவெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணடை
கற்கும் பாதம்புயத் தாயே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கன் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி பாடல்கள்

**இராகம் - ஆனந்தபைரவி** **தாளம் - சாப்பு**



வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியிருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளம் தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேகத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்
(வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளான்
கீதம் பாடும் குயிலின் குலலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலுடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்
(வெள்ளைத்)

வஞ்சமற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்
(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

(வெள்ளைத்)

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்த னமிவட் கேசெய்வ தென்றால்
வாழி ய..திங் தெளிதென்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரமிவள் பூசனை யன்றாம்.

(வெள்ளைத்)

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியினை கண்டீர்

(வெள்ளைத்)

ஊணர் தேசம் யவர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினி லின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியி னொளிமிகுந் தோங்க
(வெள்ளைத்)

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊன மின்று பெரிதிழைக் கன்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்
(வெள்ளைத்)

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்த
இனிய நீர்த்தன் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்
(வெள்ளைத்)

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகு றைந்தவர்காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாள குழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர் யெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியங் கெள்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்
(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாட்டு

## சரணம் சரணம்



கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவ நின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுஹ சரணம் சரணம்
சிலைமலி யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலை வறு மொருபரை சரணம் சரணம்
உமை சிவயம்பிகை சரணம் சரணம்

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்வாய் எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

**வாணி**

வாணி கலைத்தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

**ஸ்ரீதேவி**

பொன்னரசி, நாரணனானர் தேவி, புகழரசி
மின்னுநவரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

**பார்வதி**

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல்வளர்ப்பாள்
நிலையி துயர்ந்திடுவாள், நேரே யவள்பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச மாலை

திருச்சிற்றம்பலம்

## விநாயகர்

அரியானைக் கணபதியெ அரனார் சேயே
ஐங்கரனே பங்கையம்சேர் உமையாள் கண்ணே
கரிமுகனே கற்பகமே கசடறுத்து
கவியதற்கு முன்னிற்க வேண்டுமையா
பரிவொடு மோட்சவழிப் பாதைகாண
பாழுடம்பு விட்டகற்று பறந்ததையா
தெரியாத சீவனுக்காய் துணையாய் நின்று
திருமாலின் பதம்சேர அருள்செய்வாயே.

அருள் செவ்வாய் குஞ்சரனே அமரரோடு
அடியாரின் ஆத்மாவை அடையச்செய்து
பெருவழியில் இடைநின்று மோட்சபாதை
பிழைபொறுத்து சீவனுக்கு காட்டுமையா
கருணைகொடு கற்பகமே கழிறேமாலின்
கண்ணரிட வைகுந்த வளியில்நின்று
இருளகற்றி இந்திரபதி புகுதற்பாதை
இன்பமுடன் அளித்தருளப் போற்றினோமே.

போற்றி ஜெககணநாதா போற்றி போற்றி
பொன்மலர்தாழி இணையடிகள் போற்றி போற்றி
ஆர்ப்பரித்து இச்சீவன் அலையாவண்ணம்
ஆனைமுக வாரணனே அமரர்வாழும்
ஏற்றமுறு வைகுந்தம் போகும்பாதை
இன்பமுடன் காட்டுமையா அன்புவைத்து
சீற்றமுடன் உமைத் தொழுதோம் சித்தி முத்தி
திருக்கயிலாய வீடடைய அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி

அம்பிகை உமையேருத்திரி அச்சுதன் தங்கையாளே
எம்பிரான் தேவிநீலி ஈஸ்வரி கெவுமாரி
கொம்புடை மகிடாசூரன் கூர்பலி இட்டகாளி
சந்திரப்பதிமா வைகுந்தம் தாயேநீ காட்டுவாயே

சாம்பவிதுர்க்கை வாலைச்சாந்தகி சுடலைநாச்சி
பாம்பாணி பராபரத்தி பகைவரை அழித்தசூலி
நாராயணிவராகி தேவிநலமருள் உருத்திராணி
புவனை அபிராமிமோச்ச புகுவழி காட்டுவாயே

ஓம் சக்தி உலகமாதா உன்னடி தஞ்சமம்மா
வாமயதேவநீல வண்ணரின் பதியைநாடி
ஊனுடல் விடுத்துச்சீவன் உடன்னெதிர் வந்ததம்மா
கானெடு காளித்தாயே காட்டுவாய் வைகுந்தம் நீ

## சிவன்

அத்தனே அரனே ஆதிஅமலனே உமையாள்பங்க
பித்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்தவெண்ணீறு பூசிச்சுடலையில் ஆடும்சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய

கற்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டுவந்தார்
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நரகில்புக்கா
நற்பதி மோட்சவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் குடும்சிவசிவா இவரின் ஆத்மா
தங்குகள் தடைகளின்றி தட்சணம் அணைத்துக்கொண்டு
அங்கு உனடபாதம் போற்ற ஆண்டருள் நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்

தேவர்கள் இடுகண்தீர்த்த செந்தியம் பதியின்வாழ்வே
தாமதம் இன்றிச்சீவன் தனிவழி வந்ததையோ
வேலவா மோட்சவீடு வித்தமாம் பதியைக் காட்டி
காலனார் கொடுமை செய்யாக் கந்தனே காத்திடாயே

சரணமே சரணம் செவ்வேள் சரவணபவனே சிவன்
பிரணவ ஒலியினோடு பிரமனின் படைப்பைவிட்டு
அரகரமுருகா வந்துன் அடைகலம் சேர்ந்ததையோ
வரமருள் வடிவேலோனே வைகுந்தம் அருள் செய்வாயே

அழகனேகுமாரா ஆண்டிஅறுபடை உறையும் ஞானப்
பழம்பெரும் கனியே மோட்சப் பதிதனை அடைந்தசீவன்
உன்கழலடி பணிந்துகொண்டு கடைத்தேற முத்திநல்காய்
இளநகை அயில்வேல்கொண்ட ஏந்தலே போற்றி போற்றி

## நாராயணன்

அரிகரிராம ராமாஅச்சுதா அசோதை புத்திரா
சிறிநமோகிஸ்னதேவா திருவடி அழந்தபாதா
கருமுகில் மேகவண்ணா கருடவாகனே கண்ணா
முரகரிமுகுந்தா மோட்ச முத்திவீடளித்திடாயே

மாதவா வெங்கடேசா மாயனே வைகுந்தவாசா
ஆதவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமதுதாழில்
நீதனே நீலவண்ணா நெடியவா மோட்சவீடு
மதிசூதனே நந்தகோபாலா துணைபுரிந் தளித்திடாயே

பூதகிமுலைப் பாலுண்ட புருசோத்தம தேவதேவா
ஜானகிமணாளா றங்காயாதவ குலதிநீதா
பூமகள்கண வாமுத்தி மோட்சநற் பரகதிநல்கி
தேவர்கள் தங்களோடு திருக்கயிலாயம் சேர்ப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமாதேவி

பூமாதேவியம்மா உன்பொன்னடி சரணம்தாயே
தாமதமின்றி இந்த சடலத்தை ஏற்றிடம்மா
மேலும் இவ்வாத்மா தன்னை விரைந்துநீ அழைத்திடாது
சாமிநின் சரசகோபால் சன்நிதி சேர்த்திடாயே

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
உடலது உந்தன் பாரம் உயிருமே மோட்சவீடு
இடைவழி தடுமாறாது இன்முகம் கருணைகூர்ந்து
அம்மையே சடலந்தன்னை அன்புடன் ஏற்றிடாயே

அடைக்கலம் உனக்கேஅம்மா ஆணவமாய் கைந்கூடு
படைத்தனன் பிரமதேவன் பழுதின்றி மனிதனாக
விடைகிடைத்தது சீவனுக்கு விண்ணில்நல் மோட்சவீடு
படையொடு படைசேர்த்தோம் பாழுடம் போற்றிடாயே.

## சுபம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
சுபமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப்பாடல்கள்

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## பிள்ளையார் வணக்கம்

பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த
பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த
பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கம் பிள்ளையார் வினைகள் தீர்க்கும்
பிள்ளையார்

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்து வைக்கும்
பிள்ளையார்

மஞ்சலிலே செய்யினும் மண்ணிணாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் காட்டும்
பிள்ளையார்

அவல் பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார்

கலியுகத்தின் விந்தையைக் காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்.

## ஓம் கணேச

ஓம் கணேச ஓம் கணேச
ஓம் கணேச பாஹிமாம்
ஓம் கணேச ஓம் கணேச
ஓம் கணேச ரக்ஷமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய கணேச ஜெய கணேச
ஜெய கணேச பாஹிமாம்
ஜெய கணேச ஜெய கணேச
ஜெய கணேச ரக்ஷமாம்

ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச
ஸ்ரீ கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்

ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
ஸ்ரீ கணேச பாஹிமாம்

## கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

கதியென அருள்வாய் சரணம் கணேசா
கருணையின் வடிவே சரணம் கணேசா

சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாஸ்தா குருவே சரணம் கணேசா

முதல்வனுக்கும் நீயே சரணம் கணேசா
முனிதொழும் தேவா சரணம் கணேசா

மூத்தவன் நீயே சரணம் கணேசா
மூஷிக வாகன சரணம் கணேசா

அகந்தையை அழித்திடும் சரணம் கணேசா
அன்பினில் உறைந்திடும் சரணம் கணேசா

கஜமுகன் நீயே சரணம் கணேசா
அடியார்க் கருள்வாய் சரணம் கணேசா

ஐந்து கரத்தோனே சரணம் கணேசா
வேழ முகத்தோனே சரணம் கணேசா

பார்வதி பாலகனே சரணம் கணேசா
பக்தருக் கருள்வாய் சரணம் கணேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் வணக்கம்

சரவணா சிவகுமாரா சரவணா சிவகுமாரா
சரவணா சிவகுமாரா சரவணா சிவகுமாரா
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா
சரணம் சரணம் சண்முகநாதா
சரணம் சரணம் சண்முகநாதா
சுப்ரமணியா கார்த்திகேயா வடிவேலா
சுப்ரமணியா கார்த்திகேயா வடிவேலா
சரணம் சரணம் சண்முகநாதா
சரவணா சிவகுமாரா சரவணா சிவகுமாரா
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா

## ஹர ஹர சிவ சிவ

ஹர ஹர சிவ சிவ அம்பலவாணா
அம்பலவாணா பொன்னம்பலவாணா

சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
சிவாயநம ஓம் நமசிவாய!
சிவ சிவ சிவ சிவ சிதம்பர நாதா
எங்களை ஆட்கொள்ள இங்கு நீ வாவா

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாயநம ஓம் நமசிவாய!
சிவ சிவ சிவ சிவ சபாபதே
சிவகாமி சுந்தர உமாபதே

ஓம் நம சிவாய சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் நமசிவாய!
எமன் ரொம்ப பொல்லாதன் விடமாட்டான்
அவன் சாம்பசிவன் பக்தன் என்றால் தொடமாட்டான்

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாயநம ஓம் நமசிவாய (ஹர ஹர)
துர்க்க நிவாரண அஷ்டகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி வணக்கம்

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்.
கன துர்க்கா தேவி சரணம்.

மங்கள ரூபிணி மதியணி சூழினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பக காமினியே

ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி காமாட்ஷி
காணுறு மலரெனக் கதிர்ஒளிகாட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுற தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியால் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலத் தழைத்திட எழில்வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணதண தந்தண தவிலொளி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிரொளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பண பண பறையொளி கூவிடப்
பண்மணி நீ வருவாய்

ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி!
பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி

எண்ணிய படிநீ யருளிடவருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளியதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்விடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டுடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துர்க்க நிவாரணி மகமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ்து சாஸ்திர பலன்கள்

(நீளம் அல்லது அகலம்)

6. அடி" கடவுள் கிருபை, சௌபாக்கியம், நன்மை.
7. தரித்திரம்.
8. தெய்வ அருள் ராஜயோகம்.
9. மனைவி தோஷம், தரித்திரம் கேடு.
10. பொருள் சேரும், பால் ,பசுவிருத்தி
11. பொருள் மிகுதி, பசுக்களால் விருத்தி.
12. துன்பம் , சஞ்சலம் , மரணம்.
13. துன்பம் , வேதனை , மரணம்.
14. பொருள் இழப்பு, கவலை.
15. துன்பம்.
16. செல்வம் பொருள் சேரும்.
17. எதிரிகள் நீங்குவார்கள்.
18. பொருள் வீடுகள் நாசம்.
19. வறுமை, மக்கட்பேறு இல்லை.
20. வேளாண்மை பலிதம், சுகபோகம்.
21. நன்மையுண்டு, ஆடு மாடு இறக்கும்.
22. பகைவர் அழிவார்.
23. தீமை உண்டாகும்.
24. வயதுகுன்றும், மனைவி மரணம்.
25. மனைவி மரணம்.
26. செல்வ விருத்தி உண்டு.
27. கடவுள் கிருபை, மதிப்பான வாழ்வு.
28. தெய்வவருள், எதிரிகள் அஞ்சுவர்
29. பசு, பாக்கியம் உண்டு.
30. யோகங்களுண்டு, நோய்.
31. சிவனருளுண்டு, நோய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. சுகமான வாழ்வு, அந்நியநாடு செல்லலாம்.
33. பல நன்மையுண்டு, இருமனைவியர்.
34. குடி கேடு வேறு இடம் செல்வர்.
35. இலட்சுமி கடாட்சம் உண்டாகும்.
36. அரசர்களுக்கு ஈடாக வாழ்வர்.
37. கால்நடைகள் விருத்தியடையும், இன்பமும் இலாபமுமுண்டு.
38. வறுமை வாட்டும்.
39. நலம் பொருந்திய வாழ்வு.
40. பகை, மனைவி நாசம்.
41. செல்வந்தராகலாம்.
42. அஷ்டலட்சுமி வாசஞ்செய்வாள்.
43. நன்மையில்லை, இராசதண்டம்.
44. பொருள் நாசம், பேய்வாசம்.
45. குறைவற்ற செல்வம்.
46. தரித்திரம் , பிசாசுவாசம்.
47. பொருள் நாசம்.
48. தோஷம், தீவிபத்து.
49. துன்பம், பொருளிழப்பு.
50. நன்மையில்லை.
51. வம்புவழக்குகள் உண்டாகும்.
52. தானிய விருத்தி உண்டாகும்.
53. பெண்களால் நஷ்டம்.
54. அரசாங்கத்தால் ஆபத்து.
55. உறவினர்கள் பகையாவர்.
56. புத்திரர்பேறு உண்டு.
57. சந்ததி இராது.
58. மரணம் நேரிடும்.
59. கவலை மிகுதியாகும்.
60. வியாபார விருத்தியும் வளர்ச்சியுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

வ/ சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம்.

37/36, பன்சல வீதி, கொழும்பு 10.

HDTS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

**தங்கவேலு தெய்வானை** → **தம்பிப்பிள்ளை பார்வதி**

**வேலுப்பிள்ளை**
வீரசிங்கம்
சந்திரசிங்கம்
சிவஞானஜோதி
விஸ்வநாதன்
இராமச்சந்திரன்



சறோஜாதேவி
பரமலிங்கம்
**கமலாதேவி**
புஸ்பவதி
தேவகி
வாசுகி
ஐங்கரன்
லிங்கநாதன்

விதுன்
கிஷோர்கவின்
அபிலாஷ்
கவிஷ்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர். தங்கவேலு வேலுப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
எமது இல்லம் நாடி வந்து
துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியும்
இறுதி கிரிகைகளில் கலந்து கொண்டும்
தொலைதூரம் இருந்து தொலைபேசி
மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த அன்பர்களுக்கும்
பல்வேறு வழிகளில் பல உதவிகளை புரிந்த
அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில்
உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org